Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

இரட்சிக்கப்படுவதின் மேலான பலன்களிலொன்று
கர்த்தர்
நம்முடன் பேசுவதைக் கேட்பதாகும்.
இதைத்தவிர
நம் பரம தகப்பனோடு
நெருங்கி இருக்கிற காரியம்
வேறு எதுவும் இல்லை.

அவரோடு நாம் பேசுவது
எவ்வளவு இலகுவானதோ
அதேபோல,
அவர் பேசுவதை நாம் கேட்பதும் இலகுவானதே.

இன்றைக்கு
நாம் எல்லோருமே பரபரப்பாக இருக்கவே
விரும்புகிறோம்.அதனாலேயே
கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பது
கடினமான காரியமாக உள்ளது.

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# இனி எக்காளம்

VOL . 3 ISSUE . 12 தனிப்பிரதி ரூ 20/= ஜூலை 2010

என்னுடைய சமாதானத்தையே
உங்களுக்குக் கொடுக்கிறேன்

– யோவான் 14:27



# சமாதானத்தின் தேவன்

**– நிஜா கென்னடி**

உலகத்திலே மிகப்பெரிய ஆசீர்வாதம் சமாதானம். எல்லாம் இருந்தாலும், எவ்வளவு பணம், வசதி, வாய்ப்புகள் இருந்தாலும், சமாதானம் இல்லையென்றால் ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லை. இன்று உலகத்திலேயே உயர்ந்த பதவியிலுள்ளவர்களுக்கும், பணம் படைத்தவர்களுக்கும், தேவையானது சமாதானமே. எவ்வளவு வெள்ளி, பொன், முத்துக்களைக் கொடுத்தாலும், சமாதானத்தை பெற முடியாது. கர்த்தர் மாத்திரமே சமாதானத்தை நமக்கு தரமுடியும். சந்தோஷத்தைக் காட்டிலும் சமாதானம் மிகவும் மேலானது. சமாதானத்தையும் சமாதானத்திற்கான காரணராகிய கர்த்தரையும் தெரிந்து கொள்வது மேலான அறிவாகும்.

> உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைக்குள்ளே சுகமும் இருப்பதாக.
>
> - சங்கீதம் 122:7

இன்று அநேக குடும்பங்கள் சமாதானத்தை இழந்து காணப்படுகிறார்கள். ஒருவருக்கொருவர் உள்ள உறவு முறையில் சமாதானம் குறைந்து போய் நிம்மதியில்லாமல் இருக்கிறார்கள். குடும்பங்களில், வேலை ஸ்தலங்களில் சமாதானம் இல்லை. கணவன் மனைவிக்குள்ளும், பிள்ளைகள் பெற்றோருக்குள்ளும், சகோதர சகோதரிகளுக்குள்ளும், மாமியார் மருமகளுக்குள்ளும், மாமனார் மருமகனுக்குள்ளும் சமாதானம் இல்லை. பக்கத்து வீட்டாருக்குள்ளும், சபையில் உள்ள குடும்பங்களுக்குள்ளும் சமாதானம் இல்லாமல் இருக்கிறது. அநேகர் வீட்டில் நிம்மதியில்லாததால் வீட்டை விட்டே வெளியேறி விடுகிறார்கள். சமாதான குறைவினால் அநேக குடும்பங்கள் பிரிந்து விடுகிறது. நண்பர்கள் பிரிந்து விடுகிறார்கள். ஒருவருக்கொருவர் அன்பாய் இல்லாததால், தன்னைப்போல பிறரையும் நேசிக்காததால், பொறாமையும், வெறுப்பும் வாக்குவாதங்களும், சண்டைகளும் ஏற்படுகிறது. ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசி கோபத்தை உண்டாக்கி, ஒருவரை மற்றொருவர் குற்றப்படுத்தி மனதை காயப்படுத்தி விடுவது மட்டுமல்லாமல், உடலையும், காயப்படுத்தி



மிருககுணமுள்ளவர்களாய் மாறிவிடுகிறார்கள். கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் பிள்ளைகள் பெற்றோரையும் அடிக்கிறார்கள். சில பெற்றோர்கள் பிரச்சனைகள் நிமித்தமாக எந்தவித காரணமின்றி பிள்ளைகள் மேல் கோபப்பட்டு அவர்களை கண்மூடித்தனமாக அடிக்கிறார்கள். இன்னும் சில பெற்றோர்கள் கல்லூரிக்கு செல்லும் பிள்ளைகளைக்கட அடித்து தண்டனை கொடுக்கிறார்கள். அதனால் வீட்டின் சமாதானம் குலைந்து போகிறது. பிள்ளைகளை சிறுபிராயத்திலிருந்தே கண்டித்து வளர்க்காததாலும், பிள்ளைகளுக்கு முன் பெற்றோர்கள் முன்மாதிரியான வாழ்க்கை வாழாததாலும், பிள்ளைகளால் பெற்றோர் வேதனைப்படுகிறார்கள். அதனால் சமாதானம் போய்விடுகிறது. குடி மற்றும் போதை வஸ்துக்களுக்கு அடிமையாய் இருக்கும் கணவன் மற்றும் பிள்ளைகளாலும், கீழ்ப்படியாத மற்றும் படிப்பில் கவனம் செலுத்ததாத பிள்ளைகளாலும், குடும்பத்தில் போதுமான அளவு வருமானம் இல்லாததால் குடும்பத்தை எப்படி நடத்துவது என்ற கலக்கத்தால், நிம்மதியில்லாமல் இருக்கிறார்கள். சிலர் கடன் வாங்கியதால், அந்த கடனை செலுத்த முடியாமல் கடன் வாங்கினவர்களிடம் என்ன சொல்வது என்று பயந்து போய் இருக்கிறார்கள். சிலர் தீராத வியாதியினிமித்தமாக சோர்ந்துபோய் இருக்கிறார்கள். சிலருக்கு தொழிலில் முன்னேற்றமில்லாததால், அதையே நினைத்து சமாதானம் இல்லாமல் இருப்பார்கள். இன்னும் சிலர் சொல்லமுடியாத பல பிரச்சனைகள் நிமித்தமாக சமாதானத்தை இழந்து நிம்மதியை தேடி எங்கெங்கோ அலைந்து கொண்டிருக்கிறார்கள். உலகத்தில் எந்த இடத்திற்கு சென்றாலும், சமாதானம் கிடைக்காது. இயேசு கிறிஸ்துவிடம் வரும்போது மட்டுமே அந்த சமாதானத்தை பெற்றுக் கொள்ள முடியும். அவரே சமாதான காரணர் (மீகா 5:5). அவருடைய நாமம் சமாதான பிரபு (ஏசாயா 9:6).



உங்கள் மேல் மற்றவர்கள் எப்பொழுதும் குற்றங்கண்டுபிடித்து, உங்களை குறைசொன்னதினிமித்தமாக சமாதானத்தை இழந்துபோய், வேதனையோடிருக்கிறீர்களா? சமாதானத்தை கொடுக்கும் இயேசுவண்டை வாருங்கள். உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தை அவர் உங்களுக்கு தருவார். உங்கள் சத்துருக்கள் இச்சகம் பேசி அடங்குவார்கள் என்ற வாக்கின்படி கர்த்தர் அவர்களை அடக்குவார். ஒரு வழியாய் உங்களுக்கு விரோதமாய் வருவார்கள். ஏழு வழியாய் திரும்பிப்போவார்கள் என்ற வாக்கின்படி கர்த்தர் அவர்களுக்கு பதில் செய்வார். அவர்கள் எதை விதைத்தார்களோ அதையே அறுப்பார்கள். அவர்கள் உங்களுக்கு எதிராக பேசி, உங்களை குறை சொன்னதினால், கர்த்தர், மற்றவர்கள் அவர்கள் மேல் குறைசொல்லும்படியான சூழ்நிலையை உருவாக்குவார்.

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

- யோவான் 14:27

இயேசு கிறிஸ்து கொடுக்கும் சமாதானம் நிலையானதாக இருக்கும். ஆவியானவருக்கு நம் வாழ்க்கையில் இடங்கொடுக்கும்போது, முழுமையான சமாதானத்தை பெற்றுக் கொள்ளலாம். ஆவியானவரால் நாம் நிரப்பப்படும்போது, பயம் நம்மைவிட்டு போய்விடும். நம் நிகழ்கால, எதிர்கால வாழ்க்கையைக் குறித்த பயமும் நம்மை விட்டு போய் இயேசு கிறிஸ்துவின் சமாதானத்தால் நிரப்பப்படுவோம். உலகம் (மனுஷர்கள் மூலம், உலக நன்மைகள்) கொடுக்கும் சமாதானம் நிலையில்லாதது. உலக கவலைகளை மறக்க சிற்றின்பங்களை நோக்கி அநேகர் செல்கின்றனர். அதில் நிரந்தரமான சமாதானம் கிடைக்காது. சீக்கிரத்தில் அச்சமாதானம் அவர்களை விட்டு எடுபட்டு போகும். நம் அருமை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, எவ்வளவு பெரிய பிரச்சனைகளின் மத்தியிலும், நமக்குள்ளே சமாதானத்தை தருவார். இதுவே மெய்யான சமாதானம். நாம் இன்னும் அபிஷேகத்தால் நிரப்பப்படவில்லை என்றால், வாஞ்சையோடு கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது உலகம் கொடுக்க முடியாத சமாதானத்தினால் நிரப்பப்படுவோம்.



சமாதானப் பிரபுவாகிய இயேசுகிறிஸ்து நம்மை ஆளுகை செய்ய நாம் ஒப்புக் கொடுக்கும் போது, அவருக்கே உரியதான இயல்பான பண்புகள் நமக்குள் வரும். அப்பொழுது, கர்த்தருடைய சமாதானத்தினால் நாம் நிரப்பப்படுவோம். நம் மனநிலை சந்தோஷமாக இருப்பதால், நாம் நல்ல உடல் சுகத்தோடு ஆரோக்கியத்தோடு, செல்வ செழிப்போடு, வளமையாக, எந்தவித குறைவுமில்லாமல் மனநிறைவோடு சந்தோஷமாய் இருப்போம். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் கொடுப்பார் (சங்கீதம் *29:11*).

### *கற்பனைகளுக்கு கீழ்ப்படிதல்*

ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால், நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலவும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப் போலும் இருக்கும்.

- ஏசாயா 48:18



நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய கற்பனை (*1 யோவான் 3:23*). ஏனென்றால் அன்பு இருக்கும் இடத்தில் ஒருவருக்கொருவர் சண்டை, பொறாமை வாக்குவாதம் இருக்காது. நாம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெறவேண்டுமானால், அவருடைய கற்பனைகளின்படி ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும். அப்படி நாம் ஒருவரிலொருவர் அன்புகூரும்போது நமக்கு சமதானம் கிடைக்கும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் அவருடைய கற்பனைகளின்படி நடந்து சமாதானத்தை பெற்றுக் கொள்ள வாஞ்சிக்கிறார். நாம் சந்தோஷத்தோடு, சமாதானத்தோடு, செழிப்போடு, தேவையான அனைத்தையும் பெற்று வாழவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அதனால்தான் கர்த்தர் இந்த வாக்கை நமக்கு கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் இந்த வாக்கிற்கு கீழ்ப்படியாமல் மறுபடியும், மறுபடியும் பாவத்தில் நிலைத்திருந்தார்கள். அதனால் அவர்களுக்கு கர்த்தருடைய எச்சரிக்கை வந்தது. அவருடைய கட்டளைகளை கவனத்தில் வைத்து, அதற்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, சமாதானமும், செழிப்பும் பாய்ந்து ஓடுகிற நதியைப் போல சீராக தடைபடாமல் வரும். நமக்கு சமாதானத்தை தருவது மட்டுமல்லாம, எல்லா வசதிகளோடுகூட வாழ்வோம். நமது தேவைகளெல்லாம் சந்திக்கப்பட்டு, நிரம்பி வழியும் படியாக ஆசீர்வதிக்கப்படுவோம். நமது கவலைகள், துயரங்கள், சோர்வுகள் எல்லாம் நம்மைவிட்டு போய், ஆறுதலடைந்து சந்தோஷமாய் இருப்போம். நாம் எப்படி கர்த்தரிடமிருந்து சமாதானத்தை பெற்றுக் கொண்டோமென்பதை மற்றவர்களும் சொல்ல வேண்டும்.

உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு; அவர்களுக்கு இடறலில்லை.

- சங்கீதம் 119:165

சமாதானத்தை எப்படி பெற்றுக் கொள்வது என்பதை இந்த வார்த்தை தெளிவாக நமக்கு அறிவுறுத்துகிறது. கர்த்தரை நேசித்து அவருடைய போதனைகளைப் பின்பற்றி நடப்பவர்கள்; உண்மையான சமாதானத்தை காண்பார்கள். இவர்களை வீழ்த்த எதனாலும் முடியாது. கர்த்தரை நம்பியிருப்பவர்கள், அனுதின வாழ்க்கையில் வரும் பிரச்சனைகள் மற்றும் வேலைப்பளுவின் நிமித்தமாக வரும் நெருக்கங்கள் கவலைகள் மத்தியிலும் சமாதானமாக இருக்க முடியும். இவர்களின் சமாதானத்தை குலைத்துவிட யாராலும் முடியாது. கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும் நேசிக்கிறவர்களுக்கு எப்போதும் மிகுந்த சமாதானம் உண்டு. அவர்களுக்கு இடறவில்லை. கர்த்தரை நேசித்து அவருடைய வார்த்தையின்படி நடக்கவேண்டும் என்ற வாஞ்சையோடு இருப்பவர்களின் வாழ்க்கையில், பாவம்



செய்யும்படியான சூழ்நிலை வந்தாலும், பாவத்தில் விழுந்துவிழாதபடி வார்த்தைஅவர்களை சரியான பாதையில் வழிநடத்தும், வேத வார்த்தையை படிக்கும்போது, நம்மிடமிருக்கும், பாவசுபாவங்களை நமக்கு சுட்டி காண்பிக்கும். நாம் நம்மை சரி செய்து கொள்ள உதவியாயிருக்கும். அனுதின வாழ்க்கையில் நாம் எப்படி நடக்க வேண்டும் என்றும், மற்றவர்களுடன் உள்ள உறவு முறையில் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் அறிந்து, பாவத்திற்கும் தீமைக்கும் நம்மை விலக்கி பாதுகாத்துக் கொள்ளலாம். அப்பொழுது நம் வாழ்க்கை சமாதானமுள்ளதாயிருக்கும். பாவம் நம் வாழ்க்கையில் நுழைந்து, நாம் அதை சரி செய்து கொள்ளாமல் விட்டுவிட்டோமானால், அது நம்மை அழிவுக்கு நேராக கொண்டு போய்விடும். பால பழக்கத்திலிருந்து எளிதாக விடுபட முடியாத. பாவம் நம்மை தொடர்ந்து பிடிக்கும் என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது. பாவ பழக்க வழக்கங்களினால் குடும்பத்தில் பிரிவினைகளும், கோபமும், சண்டைகளும் வருகிறது. சமாதானமும் நம்மைவிட்டு போய்விடும். அதனால் வேதத்தை வாசிப்பதன் மூலம் நாம் நம்மை ஆராய்ந்து சரி செய்து கொள்ளலாம். பாவம் செய்வதினால் அதற்கான தண்டனையும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும் வரும்.

கர்த்தருக்கு பயப்படும் பயம் வரும்போது, நாம் தீமையான காரியங்களை செய்யாமல் நன்மையையே செய்வோம். சமாதானமாய் இருக்கும்படி நாம் முயற்சி செய்ய வேண்டும். பொல்லாதவற்றை பேசாமல், உள்ளே ஒன்று வெளியே ஒன்று வைத்து (கபடு) பேசாமல், பெருமை பேசாமல், பொய் பேசாமல் மற்றவர்களை இழிவாக பேசாமல், மிகைப்படுத்தி பேசாமல், சண்டை போடாமல் மற்றவர்களுக்குள்ளே சண்டையை உண்டாக்காமல், புறங்கூறாமல், மற்றவர்களை சபிக்காமல் இருக்கும்போது, தீமையை விட்டு விலகியிருக்கிறோம்.



நாம் எல்லோரும் எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகி றாரோ அப்படியாக நாம் இருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவாகிய ஒளி நம்மோடு கூட இருந்தால் நாம் இடறி (விழி விலகி) போவதில்லை. அவரை அறிகிற அறிவில் குறைவு வரும்போது, நாம் இடறிப்போவோம். நம் வாழ்க்கையில் இருள் போன்ற துயரமான சூழ்நிலையை நாம் கடந்து செல்லும்போது இயேசுகிறிஸ்து வாகிய ஒளி நமக்குள் இல்லாததால் நாம் தடுமாறிப்போவோம். தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் பெருக்கக்கடவது (2 பேதுரு *1:2*)

அவைகள் (கட்டளைகள்) உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப் பண்ணும்.

- நீதிமொழிகள் 3:2



கர்த்தருடைய வார்த்தையை இரவும், பகலும் தியானித்து அதன்படி நடந்து அவரோடுகூட நெருங்கி வாழ்கிறவர்கள், சமாதானமுள்ள, நிம்மதியுள்ள ஒரு வாழ்க்கை வாழ்வார்கள். அவர்கள் மனதிற்குள்ளும், அவர்களை சுற்றியிருப்பவர்களுடனும் (உள்ளும் புறமும்), அவர்கள் முதிர்வயது வரைக்கும், இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும்வரை சமாதானத்தோடு வாழ்வார்கள்.

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது. (ரோமர் *14:17*). இங்கு கர்த்தர் குறிப்பிடுவது நாம் சமாதானமாய் இருப்பதே. இந்த உலகத்திலிருந்து நாம் சமாதானத்தை பெற்றுக் கொள்ள முடியாது. சமாதானத்தின் தேவன்தான் நமக்கு சமாதானத்தை தரமுடியும். நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு செயலும், சிந்தனைகளும் சமாதானத்திற்கு ஏதுவாக இருக்கவேண்டும். மற்றவர்களின் காரியங்களில் அவர்களுடைய அழைப்போ, அனுமதியோ இல்லாமல், நாமாக நுழையக்கூடாது. அப்படி நாம் மற்றவர்களுக்காக உதவி செய்ய போகும்போதும், பின்னால் வரக்கூடிய காரியங்கள் சமாதானத்தை தருமா? அல்லது சமாதான குறைச்சலை உண்டாக்குமா என்று நன்கு யோசிக்க வேண்டும். ஒருவேளை கசப்பு வருமானால், உறவில் விரிசல்கள் ஏற்படும். அன்பு போய் விடும். அதனால் சமாதானத்தை இழந்து போவோம். அதனாலேயே ஒவ்வொரு காரியத்திலும் நாம் தேவசித்தத்தை தெரிந்து கொண்டு செயல்பட வேண்டும் (கொலோசெயர் *3:15*). கர்த்தருடைய சித்தத்தின் மையத்தில்தான் மெய்யான ஆசீர்வாதமாகிய சமாதானம் உண்டு.

## ***சமாதான குறைச்சல்***

நாம் சமாதானத்தை ஏன் இழந்து போகிறோம் என்று கவனமாக யோசித்து பார்ப்பது நல்லது. சிலர் எப்பொழுதும், மற்ற குடும்பத்தின் காரியங்களை பேசுவதிலேயே ஆர்வமாயிருப்பார்கள். சில சமயங்களில் இவர்களால் பேசப்படும் குடும்பத்தினர், இதைக் கேள்விப்பட்டு இவர்களிடம் இவர்கள் பேசின காரியத்தைக் குறித்து ஆட்சேபம் தெரிவிக்கும்போது, அங்கே வாக்குவாதம் உண்டாகிறது. சண்டை வருகிறது. அதனால் சமாதானத்தை இழக்க நேரிடுகிறது. பாருங்கள் எனக்கு பிரியமானவர்களே, ஒரு சிறிய பேச்சு, கிடைப்பதற்கரிய சமாதானத்தை இழக்க வைக்கிறது.

ஏன் குடும்பங்களில் சண்டை வந்து சமாதானம் குலைந்து போகிறது? ஒருவர் தவறு செய்யும் போது, அந்த தவற்றை குடும்பத்திலுள்ள அடுத்த நபர் சுட்டிக்காட்டும்போது, தவறு செய்தவர் தான் செய்த குற்றத்தை உணர்ந்து, தேவனிடத்தில் அறிக்கை செய்து, மனந்திரும்பிவிட வேண்டும். சிலர் தங்கள் செய்த குற்றத்தை ஒத்துக்கொள்ளாமல் தாங்கள் செய்ததே சரியானது, தவறு அல்ல என்று சொல்லி வாக்குவாதம் செய்து, சண்டைபோட்டு, கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை குறைச்சல் உண்டாக்குபவர்களாக தங்களை சுற்றியிருக்கும் ஜனங்களுக்கு முன்பாக நடந்து கொள்கிறார்கள். இவர்கள் கிறிஸ்தவர்கள் என்று பேரைச் சொல்லிக் கொண்டு, கிறிஸ்துவைப் போல நடந்து கொள்ளாததால், தேவனை அறியாத (புறஜாதி) மக்கள் இவர்களின் நடக்கையைப் பார்த்து,

கிறிஸ்துவே வேண்டாம் என்று விலகிச் சென்று விடுகிறார்கள். அநேகர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டும், ஏன் தொடர்ந்து அவர்கள் வாழ்க்கையில் சமாதானமாக வாழ முடியவில்லை? வேதத்தைப் படிப்பதில்லை. அப்படி படித்தாலும், வேத வார்த்தையின்படி நடப்பதில்லை. தொடர்ந்து அந்த சமாதானத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால், வேதத்தை படித்து அதன்படி நடக்க வேண்டும். வேதத்தின் படி நடக்காதவர்கள் தொடர்ந்து பாவம் செய்து மனசாட்சி மழுங்கிபோய் விடுவதால், அவர்கள் செய்வது பாவம் என்றே அவர்களுக்கு தெரியாமல் போய்விடுகிறது. அவர்களுடைய ஜென்ம சுபாவம் அவர்களுக்குள்ளே இருந்து கொண்டேதான் இருக்கும். அதை மேற்கொள்ள வேண்டுமானால், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வரும்போது, நமக்குள் இருக்கிற பாவத்தை சுட்டெரித்து நம்மை பரிசுத்தப்படுத்திவிடுகிறார். அபிஷேகத்தில் தொடர்ந்து நாம் இருக்கும்போதுதான் ஜென்மசுபாவத்தை மேற்கொள்ள முடியும். ஆவியானவர் நம்மை நிரப்பும் போது நம்மிலிருக்கும் குறைவுகள் எல்லாம் ஒழிந்து போகும். நம் புறம்பான மனுஷன் அழிந்தும் நம் உள்ளார்ந்த மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படவேண்டும் (2 கொரிந்தியர் 4:16)

**ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.**

- கலாத்தியர் 5:16

நம்முடைய நடக்கைகள், செயல்கள், பேச்சுகள், பார்வைகள் நாம் மாம்சத்தின்படி நடக்கிறோமா அல்லது ஆவியின்படி நடக்கிறோமா என்பதை மற்றவர்களுக்கு காட்டிக்கொடுத்துவிடும். ஆவியின் கனிகளில் ஒன்று சமாதானம். சில குடும்பங்களில் எல்லா வசதிகளும், பணமும் இருக்கும். ஆனால், சமாதானம் இருக்காது. ஏனென்றால், அங்கு கர்த்தருக்கும், வேதத்திற்கும் இடமில்லாமல் இருக்கும் கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ சமாதானம் கிடைக்கும்.



சிம்சோன் பிறப்பதற்கு முன்பே, இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரிப்பதற்கென்று கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டான். பெற்றோரால் தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டவன். கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கி வரும்போது, பலத்த காரியங்களை செய்து வந்தான். ஆனாலும், சிம்சோன் பெண்கள் மேலிருந்த இச்சையினால், கர்த்தர் தன்மேல் வைத்திருந்த தரிசனத்தை மறந்து தன் பலத்தை இழந்து, எதிரிகளின் கையில் சிக்கி தன் சமாதானத்தை தானே இழந்து போனான் (நியாயாதிபதிகள் 16:20).

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் (மத்தேயு 5:9). இரண்டு நபர்களுக்கிடையே பகை



ஏற்பட்டால், நாம் அவர்களுக்கிடையே சமாதானத்தை உண்டாக்குபவர்களாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் அன்பை (தன்னை பகைக்கிறவர்களை நேசிக்கும் அன்பு) எடுத்துச் சொல்லி, அந்த அன்பினால் கிடைக்கும் சமாதானத்தை பெற்றுக் கொள்ள நாம் உதவியாய் இருக்க வேண்டும். அப்படி நாம் மற்றவர்கள் சமாதானம் பெறுவதற்கு ஒரு கருவியாய் பயன்படும்போது கர்த்தர் நமக்குள் சமாதானத்தை தருவார்.

**துன்மார்க்கனுக்கு சமாதானம் இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

- ஏசாயா 58:22

கொலை செய்பவர்கள், கொள்ளையடிப்பவர்கள் இன்னும் மற்ற பாவங்களை செய்பவர்கள் சமாதானமாய் வாழ முடியாது. இவர்கள் கொந்தளிப்பான கடலைப்போல இருப்பார்கள். கொந்தளிக்கும் கடல் அமைதியாக இருக்காது. இவர்களால் அமைதியாக சமாதானமாக இருக்க முடியாது. தேவன்மீது வாஞ்சையில்லாமல், அவரை அலட்சியம் செய்து சுய விருப்பம் போல நடந்து நேர்மையற்ற காரியங்களை செய்வார்கள். அதனால் சமாதானத்தை இழந்து, தவிப்புடன் காணப்படுவார்கள்.

## இரத்தத்தினால் சமாதானம்.

**அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி...**

- கொலோசெயர் 1:20



நாம் பாவங்களை அறிக்கை செய்து, இயேசுகிறிஸ்துவிடம் மன்னிப்பு கேட்கும்போது, அவர் நம் பாவங்களை மன்னித்து தமது இரத்தத்தால் நம் பாவங்களை கழுவி, சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்துகிறார். சுத்த மனசாட்சியை தருகிறார். இந்த குற்றமற்ற சுத்தமான மனசாட்சியினாலேயே நாம் தேவ சமாதானத்தை பெறுகிறோம். இரட்சிக்கப்படாதவர்களின் மனசாட்சி அவர்களை எப்பொழுதும் குற்றப்படுத்திக்கொண்டேயிருக்கும். அதனால் அவர்களால் சமாதானமாய் இருக்க முடியாது.

**உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்.**

- ஏசாயா 26:3

கர்த்தரை நம்பியிருக்கிறவர்களுக்கும், அவரையே அண்டி வாழ்கிறவர்களுக்கும் கர்த்தர் உண்மையான சமாதானத்தை கொடுக்கிறார். அவரை சார்ந்து இருப்பவர்கள் நெருக்கடியான நேரத்திலும் முழுமையான நிலையான சமாதானத்தை பெற்றுக் கொள்வார்கள். அவரை நேசிக்கிறவர்கள் போராட்ட நேரத்திலும் உறுதியாக அசையாமல் நிற்பார்கள். தேவனது மாறாத அன்பும்,

பெரிதான வல்லமையும் நமக்கு இருக்கும்போது, நமது துக்கங்கள் எல்லாம் மாறி சமாதானம் நமக்குள் வரும். முழுமையான சமாதானத்திற்கு எபிரேய மொழியில் ஷாலோம் என்று பெயர்.

இயேசுகிறிஸ்துவுக்கு நம் வாழ்க்கையில் முதலிடம் கொடுத்து, நம் வாழ்க்கையின் அனைத்து பகுதியிலும் அவரை பிரதானமாக வைத்திருக்க வேண்டும். தாவீது, கர்த்தர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை என்று கூறுகிறான். அப்படி எப்போதும் கர்த்தரோடுகூட உள்ள உறவை ருசித்து பார்த்தவர்கள், ஷாலோம் என்ற வார்த்தையை உணர்ந்து, அதை தங்கள் வாயினால் விசுவாசத்தோடு அறிக்கை செய்து சுதந்தரித்துக் கொள்வார்கள். உடல் நலம் (வெளிமனுஷன்) மற்றும் மனநிலை (உள்ளார்ந்த மனுஷன்) பாதிக்கப்பட்டு கலக்கத்தோடு இருப்பவர்களுக்கு நல்ல உடல் சுகத்தையும், ஆரோக்கியத்தையும், நல்ல மனநிலையையும் கர்த்தர் கொடுத்து அவர்களை ஆசீர்வதிப்பார். முக்கியமாக பிரச்சனைகள் நிமித்தமாக மனசோர்வடைந்து, வருத்தத்தோடு இருப்பவர்களின் சோர்வை எடுத்துப்போட்டு மனசந்தோஷத்தோடுகூட இருக்கச் செய்வார். நல்ல உடல் நலமும், மன அமையும் பெற்று மகிழ்ச்சியோடு சமாதானத்தோடுகூட வாழ்வார்கள். எந்த மனுஷனாலும் இந்த சமாதானத்தை தர முடியாது. கர்த்தர் மாத்திரமே தரமுடியும்.

எதிர்காலத்தைக் குறித்த பயத்தோடு, மனக்கலக்கத்தோடு சமாதானத்தை இழந்து போயிருக்கிறீர்களா? எனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்குமா? என்றும் குறிப்பிட்ட பள்ளியில் அல்லது கல்லூரியில் எனக்கு இடம் கிடைக்குமா என்றும் பிள்ளைகளுக்கு இன்னும் ஏற்ற துணை கிடைக்கவில்லையே என்றும், குழந்தை பாக்கியம் இல்லையே என்றும் கீழ்ப்படியாத பிள்ளைகள் எப்பொழுதும் மாறுவார்கள் என்றும், கெட்ட நண்பர்களிடமிருந்து என் பிள்ளைகள் எப்பொழுது விடுபடுவார்கள் என்றும் என் தேவைகள் எல்லாம் எப்பொழுது சந்திக்கப்படும் என்று கவலையோடிருக்கிறீர்களா? உங்கள் கவலைகளை, துக்கங்களை கர்த்தரிடம் முறையிடுங்கள். உடனே மனிதர்களிடம் போகாதீர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகக் கூறுகிறான்.

> நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்.
>
> அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம், உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் குறித்து கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.
>
> - பிலிப்பியர் 4:6,7

நம்முடைய வாழ்க்கையில் போராட்டங்கள், நிந்தனைகள், வேதனைகள் வரும். நாம் அந்த பிரச்சனைகளைக் குறித்து கவலைப்பட்டு அதையே நினைத்துக் கொண்டிருக்கக்கூடாது. நாம் கர்த்தரையே சார்ந்து கொண்டு நம் கஷ்டங்களை அவரிடம் சொல்லிவிட்டு யோகோவாயீரே கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்று அவரிடம் கவலைகளை ஒப்படைத்துவிட வேண்டும். கர்த்தர்



நிச்சயமாக நம் ஜெபத்தைக் கேட்டு பதில் கொடுப்பார். சூழ்நிலை எதுவாயிருந்தாலும், நாம் நன்றியுள்ள இருதயத்தோடு தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். சமாதானத்தின் தேவன் உங்கள் வாழ்வில் சமாதானத்தை தந்து அதைஉங்கள் இருதயத்திலும் உணரச் செய்வார். கர்த்தர் கொடுக்கிற சமாதானம், எப்படி நம் இருதயத்திற்குள் வருகிறது என்பதை ஒரு மனுஷனாலும் அறிந்து கொள்ள முடியாது. இன்னின்ன காரணங்களால் இந்த சமாதானம் வந்தது என்று ஒரு மனுஷனாலும் விவரித்து சொல்ல முடியாது.

கர்த்தர்தாமே உங்களுக்கு சமாதானத்தை கொடுத்து உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

---

*உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?*

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

*உள்நாட்டு வருட சந்தா* ரூ. 200/-
*வெளிநாட்டு வருட சந்தா* ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI *வங்கி கணக்கின் பெயர் :* **S.PAULRAJ KENNEDY**
ICICI *வங்கி கணக்கு எண் : 0350 0150 7744*

*எங்களது முகவரி :* எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

---

*உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்*

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com** இணைய தளம் : **www.kennedyministries.org**






www.awmi.net

இரட்சிக்கப்படுவதின் மேலான பலன்களிலொன்று கர்த்தர் நம்முடன் பேசுவதைக் கேட்பதாகும். இதைத்தவிர நம் பரம தகப்பனோடு நெருங்கி இருக்கிற காரியம் வேறு எதுவும் இல்லை. அவரோடு நாம் பேசுவது எவ்வளவு இலகுவானதோ அதேபோல, அவர் பேசுவதை நாம் கேட்பதும் இலகுவானதே. ஆனால், ஒரு சராசரி கிறிஸ்தவனுக்கு இது கஷ்டமான காரியமாகும். அப்படி ஒரு கஷ்டமான காரியமாக இருப்பது கர்த்தருடைய நோக்கமல்ல.

கர்த்தருடைய சத்தத்தை இனங்கண்டு கொள்வது விலைமதிப்பில்லா காரியமாகும். குருட்டுத்தனமான ஒரு வாழ்வை வாழ்வதைக் காட்டிலும், கர்த்தருடைய ஞானத்தின்படி நடப்பது நமக்கு பாதுகாப்பாகும். கர்த்தருடைய சத்ததைக் கேட்டு வாழ்க்கை மாறாதவன் ஒருவனும் இருக்க முடியாது. திருமண வாழ்வின் எப்பேர்ப்பட்ட பிரச்சனையும் கர்த்தருடைய ஒரு வார்த்தையால் சரியாகும். உங்களுக்கு எப்பேர்ப்பட்ட வியாதி இருந்தாலும், கர்த்தரிடத்திலிருந்து வரும் ஒரு வார்த்தை உடனடியாக சுகத்தைத் தரும். உங்களது பண நெருக்கடியான சூழ்நிலையை எப்படி மாற்றுவது என்று கர்த்தருக்குத் தெரியும். கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதே காரியம்.

கர்த்தர் நம்மோடு தொடர்ந்து தம்முடைய ஆலோசனைகளையும், வழி நடத்துதலையும் பேசிக் கொண்டுதான் இருக்கிறார். நாம்தான் அதைக் கேட்காமல் இருக்கிறோம். கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதைக் குறித்து, குறிப்பாக இயேசு கிறிஸ்து பேசியிருக்கிறார். அவர், தம்மைக் குறித்துதான் பேசியிருக்கிறார். அவருடைய மந்தையிலுள்ள ஆடுகள் மேய்ப்பனாகிய அவருடைய சத்தத்தைக் கேட்குமென்று கூறியிருக்கிறார். ''என் ஆடுகள் என் சத்தத்தைக் கேட்கும்'' என்கிறார். கேட்கலாம் என்றும் சொல்லவில்லை. கேட்பதாகவேக் குறிப்பிடுகிறார். கண்டிப்பாகக் கேட்கவேண்டும் என்றும் சொல்லவில்லை. மிகவும் சாதாரணமான ஒரு காரியமாக, அவருடைய சத்தத்தைக் கேட்பதைக் குறித்து சொல்லுகிறார். அநேகக் கிறிஸ்தவர்களுக்கு இந்த அனுபவம் இல்லாததால் அவர் இப்படி சொல்லியிருப்பது கேள்விக் குறியாகும். இயேசு கிறிஸ்து சொல்லியிருப்பது தவறல்ல, உண்மை. இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கிறார்கள். ஆனால், இதுதான் கர்த்தருடைய சத்தம் என்று இனங்கண்டுகொள்ள முடியாமல் இருக்கிறார்கள்.



ரேடியோ மற்றும் டெலிவிஷனில் 24 மணி நேரமும் நிகழ்ச்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நாம் எப்போது அவைகளை இயக்குகிறோமோ அப்போது மட்டும்தான் சத்தத்தைக் கேட்க முடியும். நமது ரேடியோவில், டெலிவிஷனில் அந்த குறிப்பிட்ட அலைவரிசை கிடைக்கவில்லையென்றால், அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாகவில்லையென்பதல்ல அர்த்தம். அதேபோல, கர்த்தரும் நம்மோடு தொடர்ந்து பேசிக் கொண்டுதானிருக்கிறார். ஆனால், வெகு சிலரே அதைக்கேட்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்தியிருக்கிறோம். அநேகர் தங்களுக்கு பிரச்சனை வரும்போது மாத்திரமே, கர்த்தர் தங்களோடு பேச வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்கள்.

முதலாவது, நம்மை தயார் செய்ய வேண்டும். ஏற்கனவே கர்த்தர் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறார் என்றும், நீங்கள் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்றும், விசுவாசியுங்கள். எப்படியானாலும், அதற்கு நேரம், முயற்சி, கவனம் தேவை. சராசரி கிறிஸ்தவனுடைய வாழ்க்கை மிகவும் பரபரப்பானதொன்றாக இருப்பதால் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பது சுலபமானதொன்றல்ல. இன்றைக்கு நாம் எல்லோருமே பரபரப்பாக இருக்கவே விரும்புகிறோம். அதனாலேயே கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பது கடினமான காரியமாக உள்ளது.

சங்கீதம் 46:10 சொல்லுகிறது, ''அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்'' என்று. அமர்ந்திருப்பதாகும், பரபரப்பாக இருப்பது அல்ல. இதுவே நமது ஆவியின் காதுகளை கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதற்கு ஆயத்தப்படுத்துவது. கர்த்தர் எப்போதும் அமர்ந்த மெல்லிய சப்தம் மூலமாகவேப் பேசுகிறார் (1 இராஜாக்கள் 19:12). நமது அன்றாட வாழ்வின் சப்தங்கள் அதைக் கேட்கவிடாமல் செய்துவிடுகின்றது.

இரண்டாவது, மிக முக்கியமானதுமான காரியம், நமது சிந்தனைகளை நாம் கர்த்தருடைய சத்தம் என்று அநேக நேரங்களில் தவறாக நினைத்துவிடுகிறோம். கர்த்தருடைய சத்தம், நமது சிந்தனைகளில் வரும். யோவான் 4:24 சொல்லுவதுபோல, ஆவியாயிருக்கிற தேவனோடு நாம் ஆவியினாலேயே தொடர்பு கொள்ள வேண்டும். அது மூளையிலிருந்து மூளைக்கோ, வாயிலிருந்து காதுக்கோ அல்ல. கர்த்தர் நம்முடைய ஆவியுடன் பேசுகிறார். வார்த்தைகளாய் அல்ல, யோசனைகளாய், உணர்த்துதலாய் நம்மோடு இடைபடுகிறார். பின்பு, நமது ஆவி நம்முடன் வார்த்தைகளாய் பேசுகிறது. இப்படிப்போல: ''நான் நினைக்கின்றேன், கர்த்தர் என்னை இதையோ அல்லது அதையோ செய்யச் சொல்லுகிறார் என்று''. கர்த்தர், ''இதைச் செய், அதைச் செய்யாதே'' என்று சொல்லமாட்டார். ஒன்றை செய்ய உங்கள் ஆவியில் உணர்த்துவார். அதன்பின், உங்கள் ஆவி உங்களிடத்திலே இப்படி சொல்லும்: ''நான் இதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கின்றேன்''. அதனால்தான் நாம் அநேக நேரங்களில் ஆவியானவரின் ஏவுதலை பெறத் தவறுகிறோம். ஏனென்றால், அதை நமது சிந்தனை என்று நினைக்கிறோம்.

- தொடரும்

# நீங்களும் தீர்க்கதரிசனம் சொல்லலாம்

– பால்ராஜ் கென்னடி

***யோ***சுவாவிடம் தேவன் என்ன சொல்கிறார் என்று பாருங்கள்.

..நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்..

-யோசுவா 1:5

அப்படியென்றால் கர்த்தர், இதைப்படிக்கிற உங்களுக்கு இப்பொழுது சொல்வது:

**ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும், மோசேயோடும், யோசுவாவோடும் இருந்ததுபோல உன்னோடும் இருப்பேன். அல்லேலுயா!**

நம் வாழ்க்கையின் காரியங்களை தேவன் எப்படி தீர்மானித்திருக்கிறார், நம்மைக்குறித்து என்ன தரிசனம் வைத்திருக்கிறார், அதை நிறைவேற்ற எப்படிப்பட்ட வழிகளையெல்லாம் நம்மை நடத்தப்போகிறார் என்பதையெல்லாம் வேதத்தின் வார்த்தைகளைக்கொண்டு, நம் உள்ளத்திலே உணர்த்துவார். வேதத்தின் வார்த்தைகளை வைத்து பேசாத எந்த ஒரு எண்ணத்தையும், உணர்த்துதலையும் தூரப் போடுங்கள்.

முதலாவது, நாம் வேதத்தை இரவும், பகலும் தியானிக்கவேண்டும். இரண்டாவது, ஜெபத்திலே தரிக்கவேண்டும். முக்கியமாக ஜெப வேளையிலே நம்மை மறக்கவேண்டும். அதற்கு நாம் செய்யவேண்டிய காரியம், அநேகப் பாடல்களைப் பாடவேண்டும், அந்நிய பாஷையில் பேசவேண்டும். அப்படிப் பாடல்களைப் பாடி கர்த்தரைத் துதித்து ஆராதிக்கும்போது, அந்நிய பாஷைகளில் பேசும்போது, நாம் நம்மை மறப்போம். அப்பொழுது தேவ பிரசன்னம் வரும். அல்லேலுயா! கர்த்தருடைய ஆவியானவர் உங்கள் உள்ளத்திலே, பல காரியங்களை வேதத்தின் வார்த்தைகளைக் கொண்டு உணர்த்துவார். கர்த்தர்தான் அவருடைய ஆவியைக் கொண்டு பேசுகிறார் என்ற நிச்சயம் உங்களுக்குக் கிடைக்கும். எந்தவிதமான சந்தேகமும் இருக்காது. கர்த்தர்தான் உங்களோடு பேசுகிறார் என்பதற்கு அடையாளம், அது உங்கள் அறிவிற்கும், ஞானத்திற்கும் அப்பாற்பட்டு சமாதானத்தைத் தருவதாக இருக்கும் (கொலோசெயர் 3:15). அப்படி கர்த்தர் உங்களோடுகூட இடைபடும்போது, கர்த்தர்தான் இடைபடுகிறாரா? அல்லது சாத்தானுடைய குரலா? என்று அறிய இன்னொரு வழி, ஆண்டவரே! என்னுடைய அறிவு குறைவுப்பட்டது, பேசுவது நீர்தானா என்ற சந்தேகம் எனக்குத் தடையாக உள்ளது. தயவுசெய்து இன்னோருமுறை பேசுமப்பா என்று கேளுங்கள். கர்த்தர்தான் உங்களோடுகூட பேசியிருப்பா ரென்றால், மறுபடி உங்களோடு பேசுவார். ஆமென் அல்லேலுயா!

கர்த்தர், உங்களைக்குறித்தும், உங்கள் குடும்பத்திலுள்ள மற்றவர்களைக் குறித்தும், உங்களிடம் அவர் எதிர்பார்க்கும் காரியங்களையும் பேசுவார். இதோ, நீங்கள் தீர்க்கதரிசியாகிவிட்டீர்கள்.

**கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக் காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.**

**சிங்கம் கெர்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?**

-ஆமோஸ் 3:7,8

நடக்கும்போதும், உட்கார்ந்திருக்கும்போதும், பிரயாணப்படும்போதும் விழிப்பாய் இருங்கள். கர்த்தர் ஆரம்பத்தில் ஜெபவேளையில் பேசுவார். போகப்போக, எப்போது வேண்டுமானாலும் உங்களோடு பேசுவார். கர்த்தர், உங்களோடு பேசுகின்றக் காரியங்களை எழுதுங்கள். மோசே, பவுல் இவர்களெல்லாம் கர்த்தரால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டத் தீர்க்கதரிசிகள். அவர்களைக் கொண்டு கர்த்தர் வேதத்தின் பெரும்பாலான பகுதியை எழுதினார். நீங்கள் கர்த்தருடைய சத்தத்தைக்கேட்டு, அவருடைய சித்தத்தை அறிந்து நடப்பதிலும், மற்றவர்களுக்கு அவரைப் பற்றி சொல்வதிலும் எவ்வளவு ஆர்வத்தோடும், வாஞ்சையோடும், வைராக்கியத்தோடும், தாகத்தோடும் இருக்கிறீர்களோ அந்த அளவு கர்த்தர் உங்களோடு பேசுவார்.

இன்றைக்கு நாம் பார்க்கிற இந்த உலகத்திலுள்ள மனுஷர்கள் எல்லோருமே தங்களது எதிர்காலத்தைக் குறித்து யோசித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தங்கள் எதிர்காலத்தை குறித்து யோசிக்காத எந்த மனுஷனுமே இல்லையென்று சொல்லலாம். எப்பேர்ப்பட்ட பதவியில் இருந்தாலும், வசதியோடு இருந்தாலும் தனது எதிர்காலத்தை குறித்து மனுஷன் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறான். அந்த எதிர்காலம் அவனுக்கு தெரியாததினால் சமாதானம் இழந்து காணப்படுகிறான். ஏன் நீங்கள் அந்த எதிர்காலத்தைக்குறித்து கர்த்தரிடமிருந்து கேட்டுச் சொல்லும் தீர்க்கதரிசியாக இருக்கக்கூடாது? இதைப் படித்துக் கொண்டிருக்கும் உங்களை கர்த்தர் தாமே அவருடைய தீர்க்கதரிசியாக வல்லமையாக எடுத்து பயன்படுத்துவராக.

கர்த்தருடைய பிரசன்னமும், கிருபையும் உங்களோடுகூட இருப்பதாக. ஆமென்!

❍ ❍ ❍